# பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்
# வரையறுக்கப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிறுவனம்

தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (NCGI) என்பது நாட்டிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் இலங்கை அரசாங்கம் மற்றும் 13 முன்னணி நிதி நிறுவனங்களுக்கிடையில் தாபிக்கப்பட்ட அரசாங்க தனியார் பங்குடமை ஆகும். துரிதமாக மாறிவரும் சந்தைக் கேள்விகள், மாறிவரும் தொழில்நுட்பம் மற்றும் குறைந்த அளவிலான நிதி அணுகல் காரணமாக வளர்ச்சியடையும் திறனில் உள்ள வரையறைகள் ஆகியவற்றால் ஏற்படும் தடைகளை வெற்றி கொள்வதற்கு, தமது வளர்ச்சிக்கு நிதியளிப்பதற்கு பிணைய பற்றாக்குறையை ஈடு செய்யும் பொருட்கள் உத்தரவாத வசதியை வழங்குவதன் மூலம், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்கு அரசாங்கத்தினால் ஆதரவளிக்கப்படும் ஒரு நிறுவனம் ஆகும்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சித் துறையின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்தி, விரைவுபடுத்த விரும்பும் விண்ணப்பதாரர் ஒருவரை தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் தேடுகிறது. இது ஒரு புத்தம் புதிய நிறுவனம், மேலும் உந்துதல், நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவம், பலதரப்பட்ட பங்குதாரர்களுடன் பணிபுரியும் திறன், உறவுகளை முகாமைசெய்தல் மற்றும் பெறுபேறுகளை மதிப்பீடு செய்யும்போது பிரச்சனைகளை தீர்த்தல், தரவுகளை பெறுதல் மற்றும் மக்களுக்கு உந்துசக்தியை வழங்குதல் ஆகியவற்றை பயன்படுத்தி திறமையான குழுவை வழிநடத்தும் திறன் கொண்ட ஒருவருக்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

**நாம் தேடும் நபர் நீங்களா;-**

## தகைமைகள்

உங்களிடம் இருந்தால்,,

- வியாபார நிருவாகம், நிதி அல்லது பொருளியல் ஆகியவற்றில் பட்டப்பின் படிப்பு பட்டம் அல்லது அதற்கு சமமான தொழில்முறை தகுதி (ACIB, CFA, ACA, ACCA, CIMA)
- வங்கித் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினைந்து வருட அனுபவம், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி கடன்களை முகாமை செய்வதில்சில நிரூபிக்கப்பட்ட அனுபவம் மற்றும் நிபுணத்துவம் மற்றும் நிதித் துறையில் குறைந்தபட்ச அல்லது அதற்கு சமமான வேலை பதவிகள்
- 2024 மார்ச் 01 இன்படி அதிகபட்சம் 62 வயதுக்குள் இருத்தல் வேண்டும்,

## பிரதான பொறுப்புக்கள்

அரசாங்க மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த பொருளாதார நிபுணர்கள், வங்கியாளர்கள், நிதி மற்றும் சட்ட வல்லுநர்கள் அடங்கிய குழுவால் நீங்கள் ஆதரிக்கப்படுவீர்கள் அத்துடன் நீங்கள் பின்வருடவற்றை நிறைவேற்றுதல் வேண்டும்.

- தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்தின் நோக்கினை நோக்கி வேலை செய்வதற்கான உபாயத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் நிறுவனத்தின் வாய்ப்புகளைத் திட்டமிடுதல்.
- பௌதிக அலுவலகம் ஒன்றை அமைத்தல், வங்கி மற்றும் முதலீட்டு கணக்குகளை திறத்தல், மென்பொருள் மற்றும் உபகரணங்களை கையகப்படுத்துதல் மற்றும் ஒரு தொழிற்பாட்டு நிறுவனத்தை நிறுவுவதற்கு செயற்பாட்டு பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.
- திணைக்கள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செயல்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை சரியான நேரத்தில் மற்றும் திறமையாக செயல்படுத்துவதற்கு செயற்பாட்டு ஊழியர்களுக்கு உபாயரீதியான வழிகாட்டுதல்களை வழங்குதல்.
- வரவு செலவுகளை தயாரித்தல், நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு உள்ளிட்ட நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் உயர் மட்ட இணக்கம் மற்றும் நல்லாட்சியை பேணுதல்.
- பெண்கள் தலைமையிலான வியாபாரம் மற்றும் காலநிலை நிதியளிப்பு போன்றவற்றுக்கு நிதியளிப்பதற்கான குறிப்பிட்ட சேர்க்கை அளவுகோல்களை பூர்த்தி செய்யும் வாடிக்கையாளர்களின் பிரிவுகளை உருவாக்குவதற்கான பொறுப்பை ஏற்றல். உத்தரவாதத் திட்டத்தின் அதிகபட்ச பயன்பாட்டை அடைவதற்கு பங்கேற்கும் நிதி நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் பயிற்சியளித்தல்.
- நிறுவனத்தின் இலக்குகளை அடையும் துறைக்கு அதிகபட்ச நன்மைகளை வழங்குவதற்காக, நிறுவனத்தைப் பற்றி பங்குபெறும் நிதி நிறுவனங்கள் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளுடன் இணைந்து, தயாரிப்பு பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரங்களை உருவாக்குதல்.
- நிதி , பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு (MOFESNP) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களுக்கு இடையே தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பு

## ஒப்பந்த காலம் மற்றும் ஊதிய பொதி

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரருக்கு செயலாற்றுகை மற்றும் கவர்ச்சிகரமான ஊதியம் ஆகியவற்றின் அடிப்படையில் 3 வருட ஒப்பந்தமாக இருக்கும்.

## தெரிவு செய்யும்

தெரிவு செய்வதானது முறையான நேர்முகப் பரீட்சை செயல்முறை ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற அதே வேளையில் தெரிவு செய்யும் செயல்முறையின் சகல கட்டங்களிலும் தகைமையுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் அறியத் தரப்படும் என்பதனை கவனத்தில் கொள்க.

இது சம்பந்தமாக நீங்கள் விருப்பத்தை தெரிவிக்கும் பட்சத்தில் தொடர்புடைய தகைமைகளை பூர்த்தி செய்திருப்பீர்களாயின், தயவு செய்து உங்கள் முழுமையான சுய விபர தகவல் படிவத்தை உறவினர் அல்லாத தொழில்முறையான இருவரின் விசாரணை தகவல்களுடன் PDF மாதிரி ஒன்றுக்கு அமைவாக addlsec@mo.treasury.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி அதன் வன்பிரதியை பின்வரும் முகவரிக்கு 2024 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உரையின் இடது பக்கம் மேல் மூலையில் விண்ணப்பித்துள்ள பதவியை குறிப்பிடவும்.

**மேலதிகச் செயலாளர்**
**நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**
**செயலகம்**
**கொழும்பு 01**